பக்கங்கள் 22+ 04

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 14 சனிக்கிழமை 30.08.2025 | அதிர்வு 30

## ஐ.நா. ஆணையாளருக்கு உறவுகள் இன்று மகஜர்

(எஸ்.நிதர்ஷன்)



உள்நாட்டு விசாரணைப்பொறிமுறையை முற்றாக நிராகரித்து சர்வதேச நீதிப

05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்




### வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு

# சர்வதேச நீதி கோரி திரண்ட உறவுகள்!




(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்குச் சர்வதேச நீதி கோரி இன்று வடக்கு, கிழக்கில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்நிலையில், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

02▶





# சர்வதேச நீதி கோரி திரண்ட உறவுகள்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். கிட்டு பூங்கா முன்றலில் இன்று காலை 10 மணியளவில் ஒன்றுதிரண்ட போராட்டக்காரர்கள், அங்கிருந்து பேரணியாக மனிதப் புதைகுழி காணப்படும் செம்மணிப் பகுதிக்கு அண்மையாகச் சென்று நீதி கோரிக் கோஷமிட்டனர்.

"தமிழின அழிப்புக்கும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கும், போர்க் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகளுக்கும் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும்." – என்று அவர்கள் இதன்போது வலியுறுத்தினர்.

இந்தப் போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள ஒட்டு மொத்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

















# யாழில் சர்வதேச நீதி கோரி திரண்ட உறவுகள்!

















# யாழில் சர்வதேச நீதி கோரி திரண்ட உறவுகள்!






















## ஐ.நா. ஆணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறி முறையே வேண்டும் என

வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் நிறைவில்

காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கான மகஜர் ஒன்றை ஐ.நாவின் யாழ். அலுவலகத்தில் கையளித்தனர்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:–

“உள்நாட்டு விசாரணைப் பொறி முறையை முற்றாக நிராகரித்து சர்வதேச நீதிப் பொறிமுறையைக் கோருகின்றோம்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம், உலகளவில் அதிக எண்ணிக்கையிலான காணாமல்போனவர்களைக் கொண்ட ஒரு நாட்டில் நீதிக்கான எங்கள் போராட்டத்தில் உறுதியாக இருந்து வருகின்றோம்.

இந்தச் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில், நீதியை நிலை நாட்டுமாறு சர்வதேச சமூகத்தை மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது உலகளவில் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் முழு மக்களுக்கும் எதிரான ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்துகின்றது.

முதலாம் உலகப் போர் மற்றும் இரண்டாம் உலகப் போரின் போது தோன்றிய பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதல்கள் இலங்கை போன்ற நாடுகளில் உள்ள சமூகங்களை இலக்கு வைத்து இன ஒடுக்குமுறையின் கருவியாக மாறியுள்ளன.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதல் என்பது மிகவும் நயவஞ்சகமான ஆயுதமாகும். இது முழுச் சமூகத்துக்கும் நீண்டகால துயரத்தையும் உளவியல் சித்திரவதைகளையும் ஏற்படுத்துகின்றது.

ஈழத்தைப் பொறுத்தவரையில், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் முள்ளிவாய்க்காலில் ஆரம்பிக்கவில்லை. எமது உரிமைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டே இலங்கை அரசானது ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட இன ஒடுக்குமுறைக் கருவியாக இதனைப் பாவித்து வந்துள்ளது.

முள்ளிவாய்க்காலில் உச்சக்கட்டத்தை அடைந்த இலங்கையின் இனப்படுகொலைப் போரின் இறுதிக் கட்டத்தில், ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர்.

அவர்களது உறவினர்களால் இலங்கைப் பாதுகாப்புப் படையினரிடம் 21 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஒப்படைக்கப்பட்டுப் பலவந்தமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையின் ஒரு திட்டமிட்ட தந்திரோபாயமாக இலங்கையால் பலவந்தமாகக் காணாமல்போகச் செய்தல் நிகழ்த்தப்பட்டுள்ளது. இது இலங்கை அரசின் திட்டமிட்ட இன அழிப்பாகும்.

போரின் இறுதிக் கட்டத்தில், 59 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது எனச் சர்வதேசத்திடம் நீதி வேண்டி தொடர்ந்து போராடி வருகின்றோம்.

59 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்படுவதில் இலங்கை உலகில் முன்னணியில் உள்ளது. சிறுவர் உரிமைகளை நிலைநிறுத்தவும், இனப்படுகொலையை வரையறுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசைத் திருப்திப்படுத்துவதும் கால அவகாசம் கொடுப்பதும் எமது மக்களுக்கு ஆழ்ந்த வேதனையையளிக்கின்றது.

தமிழர் உரிமைப் போராட்டத்தின் போது, வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் கொல்லப்பட்டவர்கள் உட்படச் சரணடைந்தவர்களின் கதி என்ன என்பதை இலங்கை அரசு வெளிப்படுத்தச் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து மிக விரைவாக சர்வதேச விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

போர் முடிவடைந்த பின்னர், பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோரில் 350 இற்கும் மேற்பட்ட உறவினர்கள் நீதிக்காகப் போராடும் போது, தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என அறியாமலே இறந்துள்ளனர்.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய மனிதப் புதைகுழி மன்னாரில் உள்ள சதொசா புதைகுழி ஆகும். அங்கு 28 சிறுவர்களின் எலும்புக்கூடுகள் உட்பட 376 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இரண்டாவது மனிதப் புதைகுழியாகத் தற்போது அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வரும் செம்மணி – சித்துப்பத்தி இந்து மயானப் புதைகுழி பதிவாகியுள்ளது. இதுவரை குழந்தைகள் உட்பட 169 பேரின் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில் இருந்து 82 மனித உடல்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணி நிறைவடைந்த நேரத்தில் 52 நபர்களின் எச்சங்கள் மீட்கப்பட்டன.

மேற்படி புதைகுழி எவையும் விசாரிக்கப்படவில்லை. அத்துடன் எமது தாயகத்தின் ஏனைய வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் சிங்கள இராணுவம் மற்றும் சிங்களக் காடையாளர்களால் எம் உறவுகள் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டதாக அடையாளப்படுத்தப்படும் இடங்களிலும் அகழ்வுப் பணி நடைபெற வேண்டும். எனவே, சர்வதேச சுயாதீன விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டும் என ஐ.நா. மன்றத்தைக் கோருகின்றோம்.

இலங்கை தொடர்பாக கடந்த ஆகஸ்ட் 8ஆம் திகதி தங்களது அறிக்கை வெளியாகியுள்ளது. அதில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாகச் சில அடிப்படைப் பிரச்சினைகளைத் தாங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள்.

அந்த அறிக்கையில் நீங்கள் இதுவரை இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, குற்றவாளிகள், தண்டனைக்கு உட்படுத்தப்படாமல் கடந்த காலங்களில் இடம்பெற்ற கடுமையான மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட

(06ஆம் பக்கம் பார்க்க)



# இரத்தக் காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு!

தலையில் இரத்தக் காயங்களுடன் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

களுத்துறை, கட்டுகுருந்த கடற்கரை பகுதியில் இருந்து இன்று சனிக்கிழமை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடற்கரைப் பகுதியில் சடலம் ஒன்று காணப்படுகின்றது என்று 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைத்த தகவலின் பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

55 முதல் 60 வயது மதிக்கத்தக்க நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இது கொலையாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## ஐ.நா. ஆணை...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசப் போர்க் குற்றங்களுக்கு நீண்ட காலமாகத் தாமதித்து வந்த நீதியையும், பொறுப்புக்கூறலை உறுதி செய்யவும் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசுக்குக் கிடைத்த வரலாற்று வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறும் இலங்கை அரசுக்கு இராஜதந்திர அடிப்படையில் அழைப்பு விடுத்துள்ளீர்கள்.

பொறுப்புக்கூறல் தொடர்பான தங்களது மேற்படி கருத்து கடந்த 76 ஆண்டுகளாக இலங்கை அரசால் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு தொடர்ந்தும் கட்டமைப்புசார் இனவழிப்புக்கு முகம் கொடுத்தவாறு சர்வதேச நீதிக்காகக் காத்திருக்கும் தமிழ் மக்களாகிய எமக்குப் பாரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வருகின்ற செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி தொடங்கவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் உரியவர்களுக்குச் சர்வதேச நீதிப் பொறிமுறை ஊடாக உண்மை கண்டறியப்பட்ட பதில் விரைந்து வழங்குவதுடன் , பாதிக்கப்பட்டோரின் சாட்சியங்களைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திட்டமிட்ட இனப்படுகொலை மேற்கொண்ட இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்திடம் பாரப்படுத்தி விசாரணையை ஆரம்பிக்கத் தீர்மானம் நிறைவேற்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரையும், உறுப்பு நாடுகளையும் கோருகின்றோம்.



நீண்ட காலமாகப் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதற்காகச் சர்வதேச பொறிமுறைகளின் ஊடாகவும் தீர்க்கமான நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு சர்வதேச சமூகத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்.

போர் முடிவடைந்து 16 வருடங்களாக நீதி கோரியும் இன்றுடன் 3 ஆயிரத்து 114 நாட்கள் தொடர்ச்சியாக வீதிப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எமது போராட்டத்தை இலங்கை அரசால் அடக்க முடியாது. எங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைத் தேடுவதற்கும், இனப்படுகொலைக்கும் சர்வதேச பொறிமுறைகள் மூலம் நீதியைத் தேடுகின்ற எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகின்றோம்." – என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அமெரிக்கக் கனவு

அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பொருள்களுக்கு அமெரிக்கா அதிரடியாக ஐம்பது வீத வரி விதித்தமையால் இந்திய பொருளாதாரத்தில் சடுதியாக சில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. அமெரிக்கா டொலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு முன்னர் இல்லாத அளவுக்கு வீழ்ச்சி அடைந்துள்ளது. முதல் தடவையாக இந்தியப் பணத்தில் டொலரின் பெறுமதி 88 ரூபாவைத் தாண்டி உள்ளது. அதேபோல தங்கத்தின் விலையும் இந்தியாவில் வரலாறு காணாத உச்சத்தைத் தொட்டுள்ளது. இந்திய ரூபாவின் மதிப்பு சரிவு ஏற்பட்டதால் தங்கத்தின் விலை மேலும் உயரலாம் எனக் கணிக்கப்படுகின்றது.

ஆனால் இந்த பாதிப்பு எல்லாம் உடனடி - தற்காலிக - நிலைவரங்களே தவிர, இதனை இந்தியா தன் சுய முயற்சி மூலம் முறியடித்து நிமிருமென்று அமெரிக்க பொருளாதார நிபுணரான ரிச்சர்ட் வோல்ஃப் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்.

இந்தியா மீது அமெரிக்கா விதித்து இருக்கும் வரி, யானையை எலி தாக்குவது போலதான் ஆகும். இது நகைச்சுவையாக இருக்குமே தவிர, அச்சுறுத்தலாக மாறாது என்றும் அவர் விமர்சிக்கின்றார்.

உலகின் அதிகார மையம் மாறிக் கொண்டிருக்கின்றமையைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. அமெரிக்கா தலைமை தாங்கும் ஜி7 நாடுகள், தற்போத பொருளாதாரத்தில் பலம்கொண்டவையாக இல்லை. இந்தியா தலைமை தாங்கும் பிரிக்ஸ் நாடுகள்தான் பொருளாதார அளவில் முன்னிலையில் உள்ளன. இதன் மூலம் ஜி7 அமைப்பை பிரிக்ஸ் அமைப்பு பின்னுக்குத் தள்ளியிருக்கிறது என்றும் ரிச்சர்ட் வோல்ஃப் குறிப்பிட்டுள்ளார்.

உலகில், அதிகாரம் கொண்ட நாடாக அமெரிக்கா இப்போதும் இருப்பதாக நினைக்கிறார்கள். ஆனால் அவ்வாறு இல்லை. புதிய அதிகார வரிசை உருவாகி வருகிறது. இந்தியா, ரஷ்யா, சீனாவைக் கொண்ட பிரிக்ஸ் அமைப்பில் இருக்கும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 35 சதவீதமாக இருக்கும் நிலையில், ஜி7 நாடுகளின் வளர்ச்சியோ வெறும் 28 சதவீதம்தான்.

அமெரிக்கா இத்தனை அழுத்தம் கொடுத்தும், இந்தியா மசியாமல் தொடர்ந்து ரஷியாவிடம் மசகு எண்ணெய் வாங்குகிறது என்றால், அதிகார வரிசை மாறிவிட்டதற்கான அறிகுறிதானே என்று வினா எழுப்பப்படுகின்றது.

அமெரிக்க அதிபரின் நடவடிக்கை, பிரிக்ஸ் அமைப்பு நாடுகளுக்கு இடையே மேலும் ஒற்றுமையை அதிகரித்து, புதிய அதிகார வரிசையைப் பலமாக்கி வருகிறது.

அதிகவரிவிதித்து, இந்தியாவுக்கான அமெரிக்க கதவுகளை மூடினால், இந்தியா தன்னுடைய பொருள்களை ஏற்றுமதி செய்ய வேறு நாடுகளைத் தேடும். அமெரிக்காவுக்கு மட்டும் தான் பொருள்களை இந்தியா அனுப்ப முடியாது. ஆனால், பிரிக்ஸ் நாடுகளை அதன் ஏற்றுமதியில் இந்தியா சேர்த்துக் கொள்ளப்போகிறது.

அமெரிக்க கொள்கையால்தான், சராசரியாக இருந்த பிரிக்ஸ் அமைப்பு மேலும் விரிவடைந்து, அந்த நாடுகளுக்குள் ஒருங்கிணைப்பு அதிகரித்து, மேலும் பல ஒப்பந்தங்கள் வெற்றியடைந்து, மேற்கு நாடுகளின் பொருளாதாரத்தையே அது மாற்றியமைக்கப்போகிறது என்றும் எச்சரித்துள்ளார் வோல்ஃப்.

உண்மையில், உலகின் மிக அதிகாரம் கொண்ட நாடாக அமெரிக்கா தன்னை நினைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அவ்வாறு நினைத்து அது செய்யும் அதிகார நடவடிக்கைகள், நகைச்சுவையாக சொல்வது என்றால், அது தன்னைத் தானே காலில் சுட்டுக் கொள்வதற்கு சமம் என்கிறார் வோல்ஃப்.

உண்மைதான்...!

# இணுவில் அறிவாலயத்தில் இரத்ததானம்!



இறையடி சேர்ந்த இளைஞர்கள் நினைவாக, வருடா வருடம் நடைபெறும் இரத்தான முகாம் இம்முறையும் இடம் பெறவுள்ளது.நாளை ஞாயிற்றுக்கிழமை (31) காலை 9 மணியளவில் இணுவில் அறிவாலய மண்டபத்தில் (இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமை) நடைபெறும்.

உறவினர்கள், நண்பர்கள், இளைஞர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு குருதித் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. எந்த ஊரில் இருந்தாலும் இங்கு வந்து ஒரு துளி இரத்தத்தை தானமாகத் தந்து இரத்தவங்கியின் குருதித் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.






# பவள பாறைகளைப் பாதுகாக்கப் புதிய திட்டம்

(ஹஸ்பர்)

திருகோணமலை, குச்சவெளி கடல் பகுதிகளில் பவள பாறைகளை பாது காத்தல் மற்றும் சுற்றுலாத் துறையை மேம்படுத்தல் தொடர்பக ஐ.யூ.சி.என். அமைப்பின் அனுசரணையில் “Sri Lanka Coral Reef Initiative” எனும் தொனிப்பொருளில் இரண்டு நாள் கருத்தரங்கு திருகோணமலை சர்வோதயத்தில் இடம்பெற்றது.

இதில் கரடிமலை மற்றும் சல்லிமுனை போன்ற இடங்கள் முக்கிய சுற்றுலாத் தளங்களாக அடையாளப்படுத்தப்பட்டன. இந்த இடங்கள் பற்றிய பூரண விளக்கமும் அளிக்கப்பட்டது. இதன் மூலம் எதிர்காலத்தில் பல்வேறு கடல்சார் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பது பற்றி விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதில் கரையோர மூலவளங்கள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் மற்றும் துறை சார் உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# திருமலையை ஒரு பொருளாதார மையமாக்கி கிழக்கு மாகாணத்தை வளர்த்துச் செல்ல முடியும்

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தை ஒரு பொருளாதார மையமாக மேம்படுத்துவதன் மூலம் கிழக்கு மாகாணத்தின் வளர்ச்சியை அடைய முடியும் என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி இதன்போது கருத்துத் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தியின் பங்குபற்றலுடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சருமாகிய அருண் ஹேமச்சந்திரா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் இணைத் தலைவரான கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரொஷான் அக்மீமன, எஸ். குகதாசன், இம்ரான் மஹ்றூப், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி.ஏ.சி.என். தலங்கம, கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள்,மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மற்றும் முப்படைகளின் உயரதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாவட்டத்தின் கனிம வளங்களை சரியான முறையில் பயன்படுத்தி அவற்றின் மதிப்பை அதிகரித்து ஏற்றுமதிக்குத் தகுந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். முதலீட்டாளர்களை ஈர்க்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

தற்போது நாட்டில் தொழில்களுக்காகப் பயன்படுத்தப் படுவது மொத்த நிலப்பரப்பில் 0.01 வீதம் மட்டுமே ஆகும். எனவே, மாவட்டத்தில் தொழில்களுக்கு பயன்படுத்தக்கூடிய நிலங்களை பதிவு செய்து தொழில்துறை மையங்களை உருவாக்கவும், அமைச்சரவை இடையிலான ஒருங்கி ணைப்பின் கீழ் செயல்படும் வகையில் திட்டங்கள் தயாரிக் கப்பட வேண்டும்.

மாவட்ட தொழில் குழுக் கூட்டம் மிக முக்கியமானது. எனவே அதைச் செயல்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசு வழங்கக் கூடிய உதவிகளை வழங்க வேண்டும்.- என்றார்.







கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் இன்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டன. அத்துடன் பல அபிவிருத்தி தொடர்பான திட்டங்களும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதிக்காக முன்மொழியப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# வவுனியாவில் வர்த்தக நிலையத்தில் தீ பரவல்

## விரைந்து செயற்பட்டுத் தீயைக் கட்டுப்படுத்திய மாநகர சபை

**(கி.வசந்தன்)**

வவுனியா, முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள கடைத் தொகுதி ஒன்றில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இன்று மதியம் இந்தத் தீ விபத்து ஏற்பட்ட நிலையில் விரைந்து செயற்பட்ட வவுனியா மாநகர சபை தீயணைப்புப் படை, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

வவுனியா, முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள விவசாய உபகரணங்கள் விற்பனை செய்யும் கடையின் மேல் மாடியில் இருந்த அதன் களஞ்சியசாலையில் திடீரென தீப்பற்ற ஆரம்பித்தது.

இதனையடுத்து, கடை உரிமையாளரால் வவுனியா பொலிஸ் மற்றும் வவுனியா மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு என்பவற்றுக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த தீயணைப்புப் பிரிவினரும், வவுனியா பொலிஸாரும் இணைந்து பல மணி நேரப் போராட்டத்தின் பின் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர். இருப்பினும் ஒரு தொகுதி விவசாய உபகரணங்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.













# முல்லைத்தீவு மாவட்டத்துக்கு சட்டவைத்திய அதிகாரி தேவை

## அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ரவிகரன் எம்.பி. கோரிக்கை

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சட்ட வைத்திய அதிகாரி இன்மை மற்றும் கணிம அச்சுவெட்டு வருடி (CT scanner) இன்மை என்பவற்றால் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சட்ட வைத்திய அதிகாரியை நியமிப்பதுடன், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கணிய அச்சுவெட்டு வருடியையும் நியமிக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறப்பினர் ரவிகரன் தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று (29) இடம்பெற்ற நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் இந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டது. இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் தற்போது சட்டவைத்திய அதிகாரி இன்மையால் எமது மக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழல் காணப்படுகின்றது.

குறிப்பாக இறப்பவர்களின் உடல்களை உடல்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய தேவையிருப்பின், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கே உடலங்களை எடுத்துச்சென்று உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது. இவ்வாறு எடுத்துச் செல்லும் உடல்களை உடற்கூற்று பரிசோதனை மேற்கொண்டு விட்டு மீள எடுத்துவர இரண்டு நாள்களாகின்றன. இதனால் இறந்தவருடைய உறவினர்கள் பலத்த இடர்பாடுகளுக்குப் பின்னரே உடலத்தை வீட்டுக்கு எடுத்துச்செல்கின்ற நிலை காணப்படுகின்து.

எனவே முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சட்டவைத்திய அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு விரைந்து நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் கணிய அச்சுவெட்டு வருடி (CT scanner) இல்லாத நிலையும் காணப்படுகின்றது.

இதனால் கணிய அச்சுவெட்டு வருடி பரிசோதனை மேற்கொள்ளவேண்டிய நோயாளிகள் யாழ்ப்பாணத்துக்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

இவ்வாறாக இறந்தவர்களின் உடல்கள் உடல்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கும், சி.ரி. ஸ்கேன் பரிசோதனை மேற்கொள்ளவேண்டிய நோயாளிகள் யாழ்ப்பாணத்துக்கும்சென்றுவரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

எனவே, முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு விரைந்து ஒரு சட்ட வைத்திய அதிகாரியை நியமிப்பதுடன், கணிய அச்சுவெட்டு வருடியையும் (CT scanner) வழங்க வேண்டும்.– என்றார்.

இந்த நிலையில் குறித்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








### சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினத்தில்

# மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் இருந்து காந்திபூங்கா வரை நடைபெற்ற பேரணி!

**(வாலகிருஸ்ணா)**

சர்வதேச வலிந்து காணமல் ஆககப் பட்டவர்கள் தினத்தில் வடக்குக் கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக் களப்பு கல்லடி பாலத்துக்கு அருகில் இருந்து காந்தி பூங்காவை நோக்கி பேரணி நடைபெற்றது.

மட்டக்களப்பு கல்லடி பழைய பாலத் துக்கு அருகில் உயிர்நீர்த்த உறவுகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வர்களைத் தேடி உயிர்நீர்த்த உறவுகளை நினைவுகூரும் வகையில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப் பட்டது. தொடர்ந்து பேரணி ஆரம்பமானது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் வேதனைகளையும் நீதிக் கோரிக்கைகளையும் சுமந்தவாறு வாகன ஊர்தி முன்செல்ல வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பேரணி மட்டக் களப்பு நகரை நோக்கிச் சென்றது.

ஆயிரக் கணக்கான வலிந்து காணா மல் ஆக்கப்பட்ட உறவுகள் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறும் காணாமல்போன தமது உறவுகளின் புகைப் படங்களை ஏந்திய வாறும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

புதிய கல்லடி பாலம் ஊடாக – மட்டக் களப்பு பிரதான வீதியூடாக – மட்டக்களப்பு காந்திபூங்கா வரையில் ஊர்வலம் வருகை தந்தது. காந்தி பூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலா ளர்கள் நினைவுத் தூபியில் தமிழ் மக்க ளின் உரிமைக்காக ஊடகப் பணியாற்றி படுகொலை செய்யப்பட்ட ஊடகவிய லாளர்களை நினைவுகூரும் வகையில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

இப்போராட்டம், உள்நாட்டுப் பொறி முறையை நிராகரிக்கிறோம், தமிழின அழிப்புக்கும் வலிந்து காணாமல் ஆக்கப் படுதலுக்கும், போர்க் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணையைக் கோரிய வகை யில் முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் பிரதான போராட்டமாக நடந்த இந்த போராட்டமா னது வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் தலைவி திருமதி அ.அமலநாயகி தலைமையில் நடை பெற்றது. இந்தப் போராட்டத்தில் சங்கத் தின் அம்பாறை மாவட்ட தலைவி செல் வராணி, திருகோணமலை மாவட்ட தலைவி தேவி, இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், இ.சிறிநாத், அம்பாறை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பின ர.கோடீஸ்வரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், வலிந்துகாணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப் புகளின் பிரதிநிதிகள் என பெரும் எண் ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

பொது அமைப்புக்களும் தமிழ்த் தேசி யப் பரப்பில் உள்ள ஒட்டுமொத்த தமிழ்க் கட்சிகளும் இந்தப் போராட்டத்துக்குத் தமது முழுமையான ஆதரவை வழங்கி

போராட்டத்தைத் தொடர்ந்து வடக்குக் கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தால் ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு அனுப்புவதற்கான மகஜர் வாசிக்கப்பட்டது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் தலைவி திருமதி அ.அமலநாயகியால் இந்த மகஜர் வாசிக்கப்பட்டது.












# கைதான முத்து நகர் விவசாயிகளை விடுதலை செய்ய கோரி கவனவீர்ப்பு!

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

திருகோணமலை சீனக்குடா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முத்து நகர் விவசாயிகள் ஐவரையும் விடுதலை செய்ய கோரி கவனவீர்ப்புப் போராட்டம் இன்று (30) சீனக் குடா பொலிஸ் நிலையம் முன்பாக இடம்பெற்றது.

குறித்த கவனவீர்ப்பை முத்து நகர் விவசாயிகள் ஏற்பாடு செய்தனர்.

முத்து நகர் பகுதி விவசாயக் காணியில் தனியார் நிறுவனத்தினர் 'பெக்கோ' இயந்திரம் மூலமாக (27) சூரிய மின் சக்தி திட்டம் தொடர்பான வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க முற்பட்ட வேளையில் அங்கு குறித்த விவசாயிகள் சென்று தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் வாய்த் தகராறு ஆரம்பமானதுடன் பின்னர் கலவரமாகித் தனியார் நிறுவன ஊழியர்கள் பொல்லால் விவசாயிகளைத் தாக்கியுள்ளனர். இதனைத் தொடர்ந்து சீனக் குடா பொலிஸாரால் ஐந்து விவசாயிகள் கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 04 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். குறித்த விவசாயிகளை விடுதலை செய்ய கோரியும் 'பெக்கோ' இயந்திர உரிமையாளரைக் கைது செய்யக் கோரியும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

முத்துநகர் விவசாயிகளைத் தாக்கிய அரச குண்டர்களைக் கைது செய், அநியாயமாய் சிறையில் அடைக்கப்பட்ட விவசாயிகளை உடனடியாக விடுதலை செய், நிறுவனங்களுக்கு வழங்கிய விவசாய நிலங்களை விவசாயிகளுக்கு திருப்பிக் கொடு, திருகோணமலையின் வளங்கள் சூரையாடப்படுவதை நிறுத்து, எங்கள் காணிகளை எங்களுக்குக் கொடு, கம்பனிகளுக்கு இலாபம் எங்களுக்கு நடுத்தெரு போன்ற பல வாசகங்களை ஏந்தியவாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

பல போராட்டங்களை நடத்தி எங்களுக்கு அலுத்து போய் விட்டது. ஜனாதிபதி செயலகத்தில் நாளை 30 ஆம் திகதிக்குள் தீர்வு தருவோம் என கூறினர். பிரதியமைச்சர் மாவட்ட ஒருக்கிணைப்பு குழு கூட்டத்தில் கூறியது எதுவும் நடக்கவில்லை. அடியாட்கள் ஏழு பேர் வந்து எங்கள் விவசாயிகளை தாக்கினர். பொல்லால் அடித்து தாக்கினர். ஆனால் எங்கள் விவசாயிகளைக் கைது செய்து சிறையில் அடைத்து விட்டார்கள்.

பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்ற போது மதியம் 2.30 மணி தொடக்கம் மாலை ஆறுமணிவரை காத்திருந்தும் முறைப்பாட்டை ஏற்காது , கைது செய்ததுடன் வீடு தேடி வந்தும் கைது செய்தார்கள். பொலிஸார் என்பது நடுநிலையாக இந்த இடத்தில் செயற்பட்டிருக்க வேண்டும். நடுராத்திரியில் பொலிஸார் வீடு வீடாகச் சென்று கைது செய்துள்ளனர். லஞ்ச ஊழலை ஒழிப்போம் என்று கூறுபவர்கள் எங்கே. அநியாயமாக கைது செய்த அப்பாவி விவசாயிகளை உடன் விடுதலை செய்யுங்கள். விவசாயிகளை தாக்கியவர்கள் ஏன் இன்னும் கைது செய்யப்படவில்லை.

ஏழை விவசாயிகளை ஏமாற்றி ஆட்சி நடத்துகிறார்கள். ஆட்சிக்கு வரும் முன் இவர்கள் என்ன கூறினார்கள். தனியார் நிறுவனங்களுக்கு எமது வளங்களை விற்க மாட்டோம் என வாயால் வடை சுட்டவர்கள் இப்போது தாரை வார்க்கின்றனர். விவசாயிகளைப் பாதுகாப்போம் எனக் கூறி மக்களை ஏமாற்றியுள்ளனர்.

முத்து நகர் விவசாயிகளை விற்றுப் பிழைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் 355 விவசாய குடும்பங்களை வீதியில் நிற்க வைத்துள்ளனர். இம் மக்கள் ஜனாதிபதி செயலகம் வரை போராடியுள்ளனர். ஐக்கிய நாடுகள்வரை சென்று தொடர்ந்தும் போராடுவோம். அப்பாவி விவசாயிகள் ஐந்து பேரை சிறையில் அடைத்துள்ளனர். நாம் உயிரை கொடுத்தாவது போராட்டத்தில் ஈடுபடுவோம்.– என்றார்கள்.











# இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளன யாழ். மாவட்டத்துக்கான பெண்கள் வலையமைப்பு!

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளத்தின் யாழ். மாவட்டத்துக்கான பெண்கள் வலையமைப்பின் புதியநிர்வாகம்தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் யாழ். கிரீன் கிராஸ் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் (28) காலை இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் பிரதீப் பெருமாள் தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தின் 17 உள்ளூராட்சி மன்றங்களின் 50 இற்கும் மேற்பட்ட பெண் உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

புதிய நிர்வாகத்தின் தலைவராக வேலணைப் பிரதேச சபையின் உறுப்பினர் அனுஷியா ஜெயகாந்தும் உப தலைவராக யாழ். மாநகர சபையின் முதல்வர் மதிவதனி விவேகானந்தராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

செயலாளராக நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கௌசலா சிவாவும், உப செயலாளராக, சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் பௌலினா சுபோதினியும் தயாளராசாவும், பொருளாளராக வலி மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜெயகாந்தன் துவாரகாதேவியும் தெரிவு செய்யப்பட்டனர்.









# போக்குவரத்து விதிகளை மீறியவர்களின் 25 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதலாகின!

## *கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் சம்பவம்*

**(பாறுக் ஷிஹான்)**

பொதுப் போக்குவரத்துச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பலரது மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று கல்முனை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்முனை கடற்கரை பள்ளிவாசல் உட்பட புறநகர் பகுதிகளில் நேற்று (29) வெள்ளிக்கிழமை மாலை விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஆவணம், காப்புறுதி எதுவும் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்துவது, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவது, தலைக்கவசம் அணியாது செல்வது , ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, மிக ஒலி எழுப்பிய மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் தலைக்கவசம் இன்றியும் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இன்றி பயணித்தமை உள்ளிட்ட பொது போக்குவரத்து சட்ட திட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் 25 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றைச் செலுத்திச் சென்றவர்களும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தச்சோதனை நடவடிக்கையானது கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தர ஆலோசனையில், அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.பி.எச். கலனசிறி நெறிப்படுத்தலில் அம்பாறை மாவட்ட கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். கே.இப்னு அஸார் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர், மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான பி.ரி. நஸீர் உள்ளிட்ட பொலிஸார் இந்தச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய பொதுப் போக்குவரத்துச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பலரது மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட சான்றுப் பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இதேவேளை, கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவில் விபத்துக்களைக் குறைப்பதற்கு நடைபாதையை ஆக்கிரமித்துள்ள வர்த்தகர்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று கல்முனை தலைமையக மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான பி.ரி நஸீர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்துதல், வேகமாக வாகனங்களை செலுத்துதல், தலைக்கவசம் இன்றி வாகனம் செலுத்துதல் போன்ற பல்வேறுபட்ட போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இங்கு 80 வீதமானவர்கள் போக்குவரத்து விதிமுறைகளை மீறியே தமது வழமையான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.







# சாவகச்சேரி உப்புக் கேணிக் குளத்துக்கு பாதுகாப்பு வேலி அமைக்கத் தீர்மானம்!

## நகர சபைத் தவிசாளர் ஸ்ரீபிரகாஷ் தெரிவிப்பு

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட உப்புக் கேணிக் குளத்துக்குப் பாதுகாப்பு வேலி அமைக்க ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு விரைவில் பாதுகாப்பு வேலி அமைக்கப்படும் என்று சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று (29) வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்படி விடயத்தைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கோவிற்குடியிருப்புக் கிராமத்தின் தரை வட்டாரத்தில் உள்ள பழமை வாய்ந்த உப்புக்கேணிக் குளம் கடந்த காலத்தில் வெள்ள நீரைத் தேக்கி அதன் பின் மேலதிக நீரை இயற்கையாகவே குடா கடலுக்குள் செலுத்தும் தன்மை கொண்டதாக காணப்பட்டது.

இருப்பினும் அண்மைக் காலமாக அமைக்கப்படுகின்ற கட்டடங்கள், வீதி அபிவிருத்தி போன்ற செயற்பாடுகளால் கடலுக்குச் சென்றடையும் நீரோட்ட வழி தடைப்பட்டு தீவிர மழை காலத்தில் அந்தப் பகுதி மக்கள் வெள்ள அனர்த்தத்தை சந்திக்க நேர்கின்றது.

இந்த நிலையிலேயே சாவகச்சேரி நகரசபையின் முதலாவது அமர்வின் போது வட்டார உறுப்பினர் பிரணவராசா, குளத்தைத் தூர் வார வேண்டும் என்ற விடயத்தை சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

அதன்பின்னர் அண்மையில் சபை நிதியில் இருந்து குளம் தூர்வாரப்பட்டது. இதனூடாக அதிகளவு நீரைக் கொள்ளச் செய்து, வெள்ள அனர்த்தத்தைக் குறைத்துக் கொள்ள முடியும். அத்துடன் நிலத்தடி நீரையும் பாதுகாக்க முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

குளத்தினை ஆழப்படுத்தி இருப்பதனாலும் குளமானது வீதியோரம் காணப்படுவதாலும் குளத்தின் இரு பக்கங்களுக்கு பாதுகாப்பு வேலி அமைக்க வேண்டும் என்று பொது அமைப்புக்களாலும் சபை உறுப்பினர்களாலும் எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் உடனடியாக ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்து இரு பக்கங்களுக்கு பாதுகாப்பு வேலி அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்காலத்தில் அரச மற்றும் மாகாண நிதி ஒதுக்கீடுகள் ஊடாக உரிய திணைக்களங்களின் ஆலோசனைகளுடன் குளத்துக்கான நிரந்தர வடிகாலமைப்பை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நிரந்தர வடிகாலமைப்பை ஏற்படுத்த ஆறு கோடி ரூபாவரை தேவைப்படும்.– என்றார்.





# சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இடித்து அகற்றப்பட்ட சுமைதாங்கி!

## நடவடிக்கை எடுத்தார் உப தவிசாளர் கிஷோர்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட நுணாவில் கிழக்கு கல்வயல் வீதியில் அமைந்திருந்த பாரம்பரிய மரபுரிமைச் சின்னமான சுமைதாங்கி தனியார் ஒருவரால் முற்றாக இடித்து அகற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் சாவகச்சேரி நகர சபை உப தவிசாளர் ஞா.கிஷோருக்கு அறிவித்ததை அடுத்து குறித்த இடத்துக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார் உப தவிசாளர்.

இந்த நிலையில் இடித்த சுமைதாங்கியை இடித்தவர்களால் மீண்டும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் நகர சபை எல்லைக்கு உட்பட்ட பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்களை அடையாளப்படுத்தி தொல்பொருள் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்படாத சின்னங்களை நகர சபை மூலம் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதன்போது உறுதியளித்தார்.



# மலையக பெண்களின் சமூக இடைவெளியிலிருந்து முன்னோக்கிய பாதை!

**ஓர் விமர்சனக் கண்ணோட்டம்**

மலையகப் பெண்கள் இலங்கையின் சிறுபான்மை சமூகங்களில் ஓர் குறிப்பிடத்தக்க சமூகக் குழுவாக இருக்கிறார்கள். இவர்களின் வாழ்க்கை அனுபவங்கள், மத நம்பிக்கைகள், கலாச்சார மரபுகள் மற்றும் சமூக அமைப்புகள் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த ஆய்வில், மலையகப் பெண்கள் எதிர்கொள்ளும் சமூக இடைவெளி, மத சார்ந்த சடங்குகள், பண்பாட்டு விழாக்கள், நடைமுறைச் சவால்கள் மற்றும் தொழில் வாய்ப்புகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு பலதரப்பட்ட பார்வையில் ஆராயப்படுகிறது. இவ்வாய்வு மலையகத் தமிழ்ப் பெண்களின் சமூக இடைவெளி, மத கலாசாரப் பங்கு மற்றும் சமூக அசைவுகள் (social interaction) பற்றிய விவரங்களை ஆராய்கிறது.

இலங்கையின் பிற தமிழ் சமூகங்களை ஒப்பிடுகையில், மலையகப் பெண்கள் சமூகத்தில் பங்கேற்பது, வெளிப்புற உறவுகளை உருவாக்குவது, மற்றும் கல்வி சுகாதார துறைகளில் தங்கள் பங்கை விருத்தி செய்வது ஆகியவற்றில் கட்டுப்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

இலங்கையில் மலையக மக்களின் சமூகநிலை குறித்த வரலாற்று, அரசியல் கவனங்கள் அதிகம் பெற்றிருந்தாலும், பெண்கள் மற்றும் அவர்களது மத கலாச்சார இடமாற்றங்கள் குறித்த ஆய்வுகள் மிகக் குறைவாக உள்ளன. இங்கு சமூக இடைவெளி என்பது வறுமை, கல்வி, சுகாதாரம், தீர்மான சக்தி, மற்றும் தொழில் நுட்பமயமாக்கம் போன்ற அம்சங்களில் பிரதிபலிக்கின்றது. இதற்கு முக்கியக் காரணமாக மதப் பழக்கவழக்கங்கள், குடும்ப கட்டுப்பாடு, பொருளாதார வரம்புகள், மற்றும் ஆணாதிக்க அமைப்பு விளங்குகின்றன.

பூப்புனித நீராட்டு விழா, திருமண முறைகள், தொழிலாளி வாழ்க்கை, சமூக புறக்கணிப்பு போன்றவைகள் மூலம் மத கலாச்சாரமும், சமூக மாற்றங்களும் சந்திக்கின்றன. மலையக சமூக இடைவெளி விளக்கம் (Social Stratification) கல்வி மற்றும் பொருளாதார நிலைபாடு , மரபணுக்காக விதிக்கப்பட்ட ஜாதி அடிப்படையிலான புறக்கணிப்பு , குடும்பத் தலைவர் அமைப்பில் பெண்களின் பங்கு , சமூக தீர்மானங்களில் பங்கெடுத்தல் என அமைந்துள்ளது. மாறாகக் கணவனை இழந்த குடும்பங்களில் குடும்பத் தலைவியாக பெண்களின் நிலை, நடைமுறைப் பிரச்சினைகள், வேலைக்கு செல்லும் இடங்களில் பாதுகாப்பின்மை, அரச நலத்திட்டங்களில் பங்கு குறைபாடு, கல்வி மற்றும் சுகாதார வசதிகள் பற்றாக்குறை, பாலின வேறுபாடுகள் காரணமாக உருவாகும் ஒடுக்கு முறைகள் என்பன வற்றால் மலையகப் பெண்களின் சமூக இடைவெளியில், அவர்களின் கல்விசார் முன்னேற்றத்திலும் சுகாதார விழிப்புணர்விலும் நேரடியான பாதிப்பை ஏற்படுத்துகிறது. கல்வி வாய்ப்புகள் குறைவாக இருப்பதால், பல பெண்கள் ஆரம்ப நிலை கல்வியில் நிறுத்திக் கொள்கின்றனர். இதன் விளைவாக வேலைவாய்ப்புக் குறைபாடு, பொருளாதார சார்பு, மற்றும் சமூக முடிவெடுப்புகளில் பங்கேற்பு இல்லாமை போன்ற பிரச்சினைகள் தொடர்ச்சியாக உருவாகின்றன. அதேபோன்று, சுகாதார நலனுக்கான விழிப்புணர்வு குறைவால், ஊட்டச்சத்து குறைபாடு, தாய்மை மற்றும் குழந்தைகள் நலக் குறைபாடு, மனநலம் சார்ந்த பிரச்சினைகள் ஆகியவை பரவலாகக் காணப்படுகின்றன.

இவ்வாய்வின் முக்கியக் கண்டுபிடிப்பு என்னவெனில், மலையகப் பெண்களின் சமூக முன்னேற்றத்தை விருத்தி செய்ய கல்வி மற்றும் சுகாதார துறைகளில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் தேவைப்படுகிறது. கல்வி துறையில் Scholarship, ICT அடிப்படையிலான திறன் பயிற்சி, மற்றும் சமூகக் கற்றல் மையங்கள் (Community learning hubs) நிறுவப்பட வேண்டும். சுகாதார துறையில் Reproductive health clinics> Mobile health camps, மற்றும் மனநல ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.

பெண்களின் மத கலாசார அடையாளத்தை மதிக்கும் வகையில் Community centers உருவாக்கப்பட்டால், அவர்கள் பாதுகாப்பான சூழலில் சமூக பங்கேற்பை அதிகரிக்கலாம். ஆய்வின் முடிவுகளை நடைமுறைச் சூழலோடு பொருத்தி மாற்றும்போது, தோட்டப் பகுதிகளில் “பெண்கள் கல்வி மற்றும் சுகாதார மையங்கள்” நிறுவப்படுவது முக்கியமான படியாகும். இம்மையங்கள் மூலமாக பெண்களுக்கு அடிப்படைக் கல்வியறிவு, ஆரோக்கிய பரிசோதனைகள், தொழில் முனைவுத் திறன் பயிற்சிகள் வழங்கப்படலாம். இதன் மூலம் சமூக இடைவெளி குறையும், பெண்கள் சமூக முன்னேற்றத்தில் பங்காற்றும் வாய்ப்பும் அதிகரிக்கும். மலையகப் பெண்களின் சமூக இடைவெளி மற்றும் மத கலாசார இருப்பு, அவர்களின் கல்வி மற்றும் சுகாதார முன்னேற்றததுக்குத் தடையாக உள்ளது. ஆனால், சமூக கலாசாரச் சூழலை மதித்து, கல்வி மற்றும் சுகாதார துறைகளில் நடைமுறைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால், அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும். இது மட்டுமின்றி, சமூக அசைவு அதிகரித்து, மலையகப் பெண்கள் நாட்டின் கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சியில் பங்கு பெறும் நிலை உருவாகும்.

மலையகத் தமிழ்ச் சமூகமானது இலங்கையில் சுமார் 10 லட்சம் மக்கள் கொண்டுள்ளது (Department of Census & Statistics, 2021). இவ்வசதிகளில் பெரும்

தொடர்ச்சி▼

# மலையக பெண்களின் சமூக இடைவெளியிலிருந்து முன்னோக்கிய பாதை!

தொடர்ச்சி▲

பாலோர் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்றனர். 65 வீதமான பெண்கள் தொழிலாளர் நிலைமையில் உள்ளனர் (ILO Report,2018).

மலையகக் கிராமங்களில் குடிநீர், சாலை, மின் விநியோகம், மற்றும் வீட்டு வசதி போன்று அடிப்படை வளங்கள் இன்னும் போதிய முறையில் கிடைக்கவில்லை. இந்நிலை பெண்களின் அன்றாட வாழ்க்கையை சிரமப் படுத்துகிறது. குடிநீருக்காக நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டியிருப்பது, அவர்களின் கல்வி மற்றும் சமூகச் செயல்பாடுகளில் பங்கேற்பதற்கான நேரத்தை குறைக்கிறது. போக்குவரத்து வசதி இல்லாமையால், பெண்கள் மற்றும் சிறுமிகள் மேலதிகக் கல்வி மற்றும் சுகாதார சேவைகளைப் பெற முடியாமல் உள்ளனர்.

கல்வி, சுகாதாரம், அடிப்படை வசதிகள் குறைபாடு, மற்றும் குடும்பத்தில் மதுபோதையால் ஏற்படும் வன்முறை போன்றவை பெண்கள் மற்றும் சிறுமிகளின் வாழ்க்கையை ஆழமாகப் பாதிக்கின்றன.

ருனேீ 2020 அறிக்கையின்படி, மலையகக் கிராமங்களில் 42 வீதமான குடும்பங்கள் மட்டுமே நிலையான குடிநீர் வசதி பெற்றுள்ளனர். மின் விநியோகம் சுமார் 67 வீதமான வீடுகளுக்குச் சென்றடைகிறது. ஆனால் அடிக்கடி மின் துண்டிப்பு காரணமாக மாணவர்கள் இரவு நேரக் கல்வியில் சிரமம் அனுபவிக்கின்றனர். நுவரெலியா மாவட்டத்தில் பெண்கள் தினசரி 1 -2 கி.மீ. தூரம் நடந்து சென்று குடிநீர் எடுக்கின்றனர். இதனால் கல்வி, வேலை, குழந்தை பராமரிப்பு போன்ற செயல்களில் நேரம் குறைகிறது.

மலையகப் பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சினைகள், ஊட்டச்சத்து குறைபாடு, மாதவிடாய் சுகாதாரம் பற்றிய அறிவின்மை, தாய்மை மற்றும் குழந்தைகள் நலம் சார்ந்த சிக்கல்கள் போன்றவையாகும். கிராம மட்டத்தில் மருத்துவ முகாம்கள், சுகாதார ஆலோசனை சேவைகள், மற்றும் பெண்களுக்கு சிறப்பாக உளநலம் தொடர்பான சேவைகள் கிடைப்பது மிக அவசியம். மனநலம் சார்ந்த பிரச்சினைகள் குறிப்பாகப் பரவலாக ,ருந்தாலும், அதற்கான விழிப்புணர்வு மிகக் குறைவாக உள்ளது. தோட்டப் பெண்கள் தினசரி சராசரியாக 8 – 10 மணி நேரம் பணி செய்கின்றனர்.

Save the Children (2019) அறிக்கையின்படி, மலையகக் குழந்தைகளில் 28 விதமான பள்ளிக்கு சீரான முறையில் செல்லவில்லை. எடுத்துக்காட்டாக கந்தப் பொளையக் கிராமத்தில் குழந்தைகள் பெற்றோர்கள் வேலைக்குச் செல்லும் நேரத்தில் தாத்தாஃபாட்டி பராமரிப்பில் வைக்கப்படுகின்றனர் ஆனால் கல்விசார் ஆதரவு மிகக் குறைவு. னுயஎ-உயசந உநவெநசஎ இல்லாமையால், 0 – 5 வயது குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடால் பாதிக்கப்படுகின்றனர் (WHO Nutrition Survey, 2022 மலையகத்தில் குழந்தைகளில் 33 வீதம் stunting).

பெண் பிள்ளைகள் கல்விச் சூழலில் பங்கெடுத்தாலும், கிராமிய மட்டத்தில் நடைபெறும் வேலைத்திட்டங்களில் அவர்களின் பங்களிப்பு மிகக் குறைவு. சமூகக் கட்டுப் பாடுகள், பாலின அசமத்துவம், மற்றும் குடும்பச் சுமைகள் காரணமாக, அவர்கள் சமூக முன்னேற்றத் திட்டங்களில் பங்காற்றும் வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன. எனினும், மாணவச் சங்கங்கள், விளையாட்டு குழுக்கள், மற்றும் சமூக சேவைத் திட்டங்கள் மூலமாக பெண்கள் பங்கேற்பை ஊக்குவித்தால், அவர்களின் சமூக அசைவு அதிகரித்து, எதிர்கால தலைமைத்துவத்துக்கான திறன்கள் வளர வாய்ப்புண்டு.



### குடும்ப சூழல் மது, போதை பாதிப்பு

மலையகக் குடும்பங்களில் குடும்பத் தலைவர்கள் மதுபோதையில் ஈடுபடுவது, குடும்பத்தின் பொருளாதார நிலையை மட்டுமல்லாமல், பிள்ளைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பையும் நேரடியாக பாதிக்கிறது. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல், வீட்டு வன்முறை, பாதுகாப்பின்மை, மற்றும் மனஅழுத்தம் போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். குறிப்பாகப் பெண் பிள்ளைகள் குடும்பத்தினரால் திணிக்கப்படும் பாதுகாப்பின்மையின் காரணமாக கல்வியைத் தொடர முடியாமல் போகிறது. ADIC Sri Lanka (2023) ஆய்வின்படி, மலையகத் தொழிலாளர்களில் 45 வீத ஆண்கள் அடிக்கடி மது அருந்துவதாகக் கூறியுள்ளனர். 30 வீதமான குடும் பங்கள் குடும்பச் சண்டைகள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறைக்கு “மது போதை”யை காரணமாகக் குறிப்பிடுகின்றனர். எடுத்துக்காட்டாக நுவரெலியாவின் சில பாடசாலைகளில், ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி குறைபாட்டிற்கு “குடும்ப வன்முறை மற்றும் மது போதை” பிரதான காரணம் என சுட்டிக்காட்டியுள்ளனர். இதனால் பெண் பிள்ளைகள் கல்வியில் பின்தங்குவது மட்டுமல்ல, school dropout விகிதம் 12 – 15 வீதம் வரை அதிகரிக்கிறது.

### பாடசாலை மட்ட தீர்வுகள்

கல்வி வாய்ப்புகளை மேம்படுத்துதல் மூலம் மாணவிகளுக்கான சிறப்பு scholarship திட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும். பள்ளி விட்டு விலகும் மாணவிகளுக்கான second-chance education programs (இரவு வகுப்புகள், சமூகக் கற்றல் மையங்கள்) அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இந்தியாவின் National Literacy Mission போல, மலையகத்தில் “மாணவிகள் எழுச்சி திட்டம்” (Girls Uplift Program) தொடங்கலாம். பாலின சமத்துவக் கல்வியை அறிமுகப்படுத்தி பாடசாலைகளில் Gender Equality Clubs உருவாக்கி, மாணவர்களின் தலைமைத் திறன்களைப் பெற ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கு gender-sensitive training வழங்கப்பட வேண்டும்.

சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நடைமுறைகள் பள்ளி அடிப்படையில் mid-day meal program அமல் படுத்தப்பட வேண்டும். UNICEF 2021 ஆய்வின்படி, பள்ளியில் உணவு வழங்கப்பட்ட மாணவிகள், வகுப்பு பங்கேற்பில் 20 வீதத்துக்கு அதிகமாக ஈடுபட்டனர். மாதவிடாய் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.பாதுகாப்பு சார்ந்து பள்ளிகளில் child

தொடர்ச்சி▼



# மலையக பெண்களின் சமூக இடைவெளியிலிருந்து முன்னோக்கிய பாதை!

தொடர்ச்சி▲

protection committees அமைத்து, மாணவிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும். பாலியல் தொந்தரவு குறித்த புகார் பெட்டிகள் மற்றும் இரகசிய ஆலோசனை மையங்கள் இருக்க வேண்டும்.

**குடும்ப மட்டத் தீர்வுகள்**

குடும்ப விழிப்புணர்வுக்கு பெற்றோர்கள் கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள parental awareness workshops நடத்தப்பட வேண்டும். ஹட்டன் பகுதியில் Save the Children நடத்திய " Parent–Teacher Interaction Program" மூலம், 70 வீதமான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மேல்நிலைக் கல்விக்குச் செலுத்தத் தயாரானார்கள். பெற்றோர்கள்–ஆசிரியர்கள் இணைந்து Child Progress Monitoring System உருவாக்க வேண்டும்.

மாதாந்த பெற்றோர் கூட்டங்களில் மாணவிகளின் முன்னேற்றம், சவால்கள் விவாதிக்கப்பட வேண்டும். ஒருங்கிணைந்த அணுகுமுறையாக பாடசாலையும் குடும்பமும் இணைந்து பங்காற்ற வேண்டும். குழந்தைப் பராமரிப்பு வசதிகள் மற்றும் குடும்ப விழிப்புணர்வுகள் பெண்களுக்கு வேலைக்குச் செல்லும் நேரத்தில் day-care centers அமைக்கப்பட வேண்டும். தாய்மார்களுக்கு nutrition and child care training வழங்கப்பட வேண்டும்.

குடும்ப ஆலோசனை மையங்கள் மூலம் குடும்பத்தில் ஏற்படும் வன்முறை மற்றும் சண்டைகளுக்கு family counselling units அமைக்கப்பட வேண்டும்.எடுத்துக்காட்ட எச்.எவ். இந்தியாவின் Self Employed Women's Association (SEWA) போல, மலையகப் பெண்களுக்கு குடும்பச் சட்ட ஆலோசனைகள் வழங்கப்படலாம். குடும்பம் சார் சமூக அமைப்புகள் குடும்பங்கள் மற்றும் NGO-க்கள் இணைந்து Cutrition Gardens அமைத்து, ஊட்டச்சத்து குறைபாட்டை குறைக்கலாம். குடும்ப ஆலோசனை மையங்களை சமூக அமைப்புகள் நிர்வகிக்கலாம். மது மற்றும் போதைப் பொருள் எதிர்ப்புக்களை குடும்பத்தினுள் குடும்பத் தலைவர்களை குறிவைத்து de-addiction programs நடத்தப்பட வேண்டும். Community Alcohol-Free Campaigns மூலம் குடும்ப வன்முறையை குறைக்க முடியும்.

சமூக அமைப்புகளின் பங்களிப்பு

அடிப்படை வசதிகளை உள்ளூர் சமூக அமைப்புகள் (NGO/Youth Clubs) இணைந்து குடிநீர், மின், சாலை வசதிகளை மேம்படுத்த அரசுடன் இணைந்து செயல்பட வேண்டும். நுவரெலியாவில் Women Development Federation, 200 குடும்பங்களுக்கு மழைநீர் சேகரிப்பு திட்டம் அமைத்து குடிநீர் பிரச்சினையைத் தணித்துள்ளது.

பெண்களின் சமூக அசைவுயை உறுதிப்படுத்த Women's Community Centers உருவாக்கி, பெண்கள் சமூகக் கலந்துரையாடலில் பங்கேற்க வாய்ப்பு பெற வேண்டும். தொழில் முனைவுத் திறன்களை வளர்க்க skills development workshops நடத்தப்பட வேண்டும். நலன் சார் சுகாதார சேவைகள் சமூக அமைப்புகளால் mobile health clinics நடாத்தி, மாதந்தோறும் சுகாதார பரிசோதனை வழங்க வேண்டும். மனநலம் தொடர்பான peer-support groups உருவாக்கப்பட வேண்டும். கல்வி மற்றும் சமூக பங்கேற்பு மாற்றத்தில் வலுச்சேர்க்கும். அதன்படி NGO-fs; girls mentorship programs நடத்தி, மாணவிகளுக்கு உயர்கல்வி, வேலை வாய்ப்பு வழிகாட்டுதலை வழங்க வேண்டும். ADIC நடத்தும் Youth Ambassador"சழபசயஅ போல, மலையகப் பகுதிகளில் "Girls Leadership Ambassadors" உருவாக்கலாம். மது மற்றும் போதை எதிர்ப்பு சமூக அமைப்புகள் Awareness street drama,Poster campaigns, Community talks போன்ற வழிகளில் மதுவிலக்கு விழிப்புணர்வைப் பரப்ப வேண்டும். 2023 இல் ஹபுத்தளை பகுதியில் நடந்த "Alcohol Free Village Campaign" மூலம், 15 வீதம் ஆண்கள் மதுப் பழக்கத்தை நிறுத்தியதாக அறிக்கை கூறுகிறது.

பாடசாலை சமூக அமைப்புகள் பள்ளி மாணவிகளுக்கான career guidance workshops சமூக அமைப்புகள் மூலம் நடத்தப்படலாம். School Community Partnership Programs மூலம் சிறுமிகள் சமூக சேவையில் பங்கேற்கலாம். மலையகப் பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பல அடுக்குகளில் (multi-dimensional) உள்ளன. அடிப்படை வசதிகள் பற்றாக்குறை, குழந்தைப் பராமரிப்பு சிக்கல்கள், சுகாதார சேவை குறைபாடு, மற்றும் குடும்பத்தில் மது போதையால் உருவாகும் வன்முறை ஆகியவை அனைத்தும் இணைந்து அவர்களின் கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்தைத் தடுக்கின்றன.

சமூகம் வளம் பெற வீட்டிலிருந்து மாற்றம் தேவை. விவேகானந்தர் கூறியது போல " நீ திருந்து உலகு தானே திருந்தும்". சுய அடையாளத்தை உணர்ந்து உண்மையுடன் மாற்றம் காண்போம்.

**சரவணன் லக்ஷ்ஹரன்**
உளவியல் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.



# ஜம்மு - காஷ்மீரில் நிலச்சரிவு; ஒரே குடும்பத்தில் 7 பேர் பலி!

ஜம்மு - காஷ்மீரின் ரியாசியில் நிலச்சரிவு காரணமாக வீடு இடிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜம்மு காஷ்மீரின் பல மாவட்டங்களில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது. நிலச்சரிவு மற்றும் கனமழை காரணமாக ஜம்மு - காஷ்மீரில் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜம்மு - காஷ்மீரின் ரியாசியில் ஏற்பட்ட மேகவெடிப்பை தொடர்ந்து இன்று அதிகாலை 3 மணியளவில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் மண்ணுக்குள் புதைந்தனர். இதில் ஐந்து குழந்தைகள் உட்பட ஏழு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கடும் மழை காரணமக மீட்புப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மாஹோர் பகுதியில் இருந்த அந்த வீடு நிலச்சரிவில் சிக்கியது குறித்து அதிகாலையில்தான் தெரியவந்ததாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். உயிரிழந்த குடும்பத்தினர் 4 மணி நேரம் மண்ணில் புதைந்து இருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதே போல காஷ்மீரின் ராம்பன் மாவட்டத்தின் ராஜ்காட் பகுதியில் ஏற்பட்ட மேக வெடிப்பு காரணமாக 4 பேர் உயிரிழந்தனர். இருவரை காணவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.







# ஆந்திர மாநிலத்தில் பஸ்ஸில் தீ விபத்து!

## 40 பயணிகள் உயிர் தப்பினர்

ஆந்திர மாநிலத்தின் விசாகப்பட்டினம், சாந்திநகர் பகுதியில் நேற்று காலை அரச பஸ் ஒன்றில் திடீரென தீப் பற்றியது.

கூர்மண்ண பாளையத்தில் இருந்து விஜயநகரம் நோக்கிச் சென்ற அந்தப் பஸ்ஸில் தீ பரவத் தொடங்கியதும், உடனடியாக பஸ்ஸை வீதியோரம் நிறுத்தி பயணிகளை நடத்துனர் இறக்கி விட்டார். அதன் பின்னர் பஸ்ஸில் தீ வேகமாக பரவியது.

தகவல் அறிந்த தீயணைப்பு படையினர் 2 வாகனங்களில் விரைந்து வந்து தீயை அணைத்தனர். ஆனால் அதற்குள் பஸ் முற்றிலுமாக தீயில் எரிந்து நாசமடைந்தது. பஸ்ஸை உரிய நேரத்தில் நிறுத்தியதால் அதில் இருந்த சுமார் 40 பயணிகள் உயிர் தப்பினர்.

இந்த விபத்துக்கு மின்கசிவே காரணம் என பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# புதிய வாக்காளர்கள் தி.மு.கவுக்கு ஆதரவு

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு



தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் ஸ்டாலின் இன்று காலை 9 மணிக்கு விமானத்தில் ஜேர்மனிக்கு புறப்பட்டுச் சென்றார்.

துர்கா ஸ்டாலின், முதல்வரின் செயலர்கள், பாதுகாப்பு அதிகாரிகளும் முதல்வர் உடன் செல்கின்றனர். இன்று இரவு 9 மணிக்கு ஜேர்மனி சென்றடையும் அவருக்கு அயலக தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர். அங்கு முதலீட்டாளர்களை முதல்வர் நாளை சந்திக்கிறார். ஜெர்மனி பயணத்தை முடித்துக்கொண்டு, செப்ரெம்பர் 1 ஆம் திகதி இங்கிலாந்து தலைநகர் லண்டனுக்கு புறப்படுகிறார்.

இந்த நிலையில், சென்னை விமான நிலையம் செல்வதற்கு முன்பாக பத்திரிகையாளர்களை சந்தித்தார் முதல்வர் ஸ்டாலின். அப்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

“ஒருவாரகால பயணமாக ஜெர்மனி, இங்கிலாந்து செல்கிறேன். இந்த பயணத்தில் தமிழ்நாட்டை நோக்கி தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

என்னுடைய ஒவ்வொரு வெளிநாட்டு பயணத்திலும் தரவுகளை எடுத்துச் சொல்லி தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அழைப்பு விடுத்திருக்கிறேன். ஐக்கிய அரபு அமீரகம், அமெரிக்கா, ஸ்பெயின், ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய ஐந்து நாடுகளுக்கு நான் சென்று வந்ததன் மூலம் 18,498 கோடி இந்திய ரூபாவுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தமிழ் நாட்டுக்கு கிடைத்துள்ளன.

நாட்டிலேயே அதிவேகமான வளர்ச்சிப் பணிகள் நடைபெறக்கூடிய தமிழ்நாட்டை நோக்கி புதிய முதலீடுகளை ஈர்க்க நான் ஜேர்மனி, இங்கிலாந்துக்கு செல்கிறேன். அதற்கு உங்கள் வாழ்த்துகள் எனக்கு வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் அன்புடன் நான் புறப்பட்டுச் செல்கிறேன்.” என்றார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த முதல்வர் ஸ்டாலின்,

“ தி.மு.க. கூட்டணிக்கு புதிய கட்சிகள் வருகிறதோ இல்லையோ புதிய வாக்காளர்களை வந்துகொண்டிருக்கின்றனர். அதுதான் உண்மை. பிஹாரில் தேர்தல் ஆணையம் செய்ததைப் போல, தமிழ்நாட்டில் யார் எப்படிப்பட்ட சதி செய்தாலும் அதை முறியடிக்கும் வல்லமை தமிழ்நாட்டுக்கு உண்டு. பிஹாரிலும் கூட மக்களை எழுச்சிப் பெற வைக்க தேர்தல் ஆணையம் உதவி செய்திருக்கிறது.”என்று தெரிவித்தார்.




# டொனால்ட் ட்ரம்ப் விதித்த பெரும்பாலான வரிகள் சட்டவிரோதமானவை; மேன்முறையீட்டு நீதிமன்றம்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பிறப்பித்த பெரும்பாலான வரிகள் சட்டவிரோதமானவை என்று அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இது, அவரது வெளியுறவுக் கொள்கை நிகழ்ச்சி நிரலை மாற்றக்கூடிய ஒரு சட்ட மோதலை ஏற்படுத்தியுள்ளதாக கருதப்படுகிறது.

இந்த தீர்ப்பு, உலகெங்கிலும் உள்ள பெரும்பாலான நாடுகளின் மீது விதிக்கப்பட்ட ட்ரம்பின் “பரஸ்பர” வரிகளையும், சீனா, மெக்சிகோ மற்றும் கனடா மீது விதிக்கப்பட்ட பிற வரிகளையும் தடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், அவசரக்கால பொருளாதார அதிகாரச் சட்டத்தின் கீழ், இந்த வரிகள் அனுமதிக்கப்பட்டன என்ற ட்ரம்பின் வாதத்தை அமெரிக்கப் பிராந்திய மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது. அவை “சட்டத்திற்கு முரணானது என்பதால் செல்லாது” என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

எனினும் இந்த தீர்ப்புக்கு ட்ரம்ப் நிர்வாகம் உயர் நீதிமன்றத்தில் சவால் செய்ய முடியும் என்பதற்கு, அவகாசம் அளிக்கும் வகையில் இந்த தீர்ப்பு ஒக்டோபர் 14 வரை நடைமுறைக்கு வராது என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த தீர்ப்பு நடைமுறைக்கு வந்திருந்தால், அதன் முடிவு உண்மையில் அமெரிக்காவை அழித்துவிடும் என்று, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், தமது ட்ரூத் சோஷியல் பதிவில், நீதிமன்ற தீர்ப்பை விமர்சித்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த வரிகள் நீக்கப்பட வேண்டும் என்று தவறாகக் கூறியது, ஆனால் இறுதியில் அமெரிக்கா வெற்றி பெறும் என்பது அவர்களுக்குத் தெரியும் என்றும் ட்ரம்ப் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# பாலஸ்தீன ஜனாதிபதி உள்ளிட்ட 80 அதிகாரிகளின் விசாக்கள் ரத்து

## அமெரிக்கா அதிரடி நடவடிக்கை



பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் மற்றும் 80 பாலஸ்தீன அதிகாரிகளின் விசாக்களை அமெரிக்கா ரத்துச் செய்துள்ளது.

இந்த நிலையில், அடுத்த மாதம் நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் தடை செய்யப்பட்டுள்ளார் என்பதை அமெரிக்க ராஜாங்க திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

இருப்பினும், விசாக்களை மறுப்பது அல்லது ரத்து செய்வது என்ற அமெரிக்காவின் நடவடிக்கை அந்தந்த அரசாங்கங்களுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளைப் பொருட்படுத்தாமல், நியூயோர்க்கில் வெளிநாட்டு அதிகாரிகள் வருகை அமெரிக்காவால் தடைபடாது என்று கோடிட்டுக் காட்டும் ஐக்கிய நாடுகளின் ஆவணத்துடன், இந்த விசா ரத்து நடவடிக்கை இணங்குகிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று பிபிசி கூறுகிறது.

அமைதி முயற்சிகளை குறைமதிப்புக்கு உட்படுத்தியதற்காகவும், பாலஸ்தீனத்தை ஒரு நாடாக ஒருதலைப்பட்சமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று கோரியதற்காகவும், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

எனினும் டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்தின் முடிவுக்கு எதிராக, இந்த அமர்வின் போது, பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிப்பதற்கான சர்வதேச முயற்சிகளுக்கு பிரான்ஸ் தலைமை தாங்குவதால் இந்தத் தடை வந்துள்ளதாக கருதப்படுகிறது

முன்னதாக, ஐக்கிய நாடுகளுக்கான பாலஸ்தீன தூதர் ரியாத் மன்சூர், நாட்டின் தூதுக்குழுவின் தலைவராக, நியூயோர்க்கில் நடைபெறும் நாட்டுத் தலைவர்கள் மற்றும் அரசாங்கத் தலைவர்கள் கூட்டத்தில் அப்பாஸ் கலந்து கொள்வார் என்று கூறியிருந்தார்.

பக்கங்கள் 04

கனடா முரசு

சனிக்கிழமை 30/08/2025

## கொலம்பியாவில் திடீரென காட்டுத்தீ

### ஒருவர் கைது

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவின் பெண்டிக்டன் பகுதியில் திங்கட்கிழமை ஏற்பட்ட 04▶



# கனடாவின் பொருளாதாரம் 1.6 வீதம் வீழ்ச்சியடைந்தது

**கனடாவின் பொருளாதாரம், இரண்டாம் காலாண்டில் 1.6 வீதம் வீழ்ச்சியடைந்ததாக கனடா புள்ளிவிவரத் துறை தெரிவித்துள்ளது.**


**அமெரிக்காவின் புதிய சுங்க வரிகள் காரணமாக ஏற்றுமதி மற்றும் முதலீடுகள் கடுமையாக குறைந்தது இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது. முதலாம் காலாண்டில் 2 வீதம் வளர்ச்சி பதிவான நிலையில், இரண்டாம் காலாண்டில் அதிரடியாக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.**

குறிப்பாக கார், எஃகு, அலுமினியம் ஏற்றுமதிகள் 25 வீதம் வரை சரிந்துள்ளன. தொழில்துறை இயந்திரங்கள் மற்றும் உபகரண ஏற்றுமதிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மூலதன முதலீடுகள் 9.4 வீதம் குறைந்துள்ளன் இது 2016 இற்கு பிறகு ஏற்பட்ட மிகப்பெரிய வீழ்ச்சி எனக் கூறப்படுகிறது. கனடாவின் எதிர் சுங்க வரி நடவடிக்கைகள் காரணமாக இறக்குமதியும் சரிந்துள்ளது.

ட்ரம்ப் விதித்த சுங்க வரிகள் கனடா வளர்ச்சியை மட்டுப்படுத்துவதாக பொருளாதார நிபுணர்கள், எச்சரித்துள்ளனர்.

எதிர்வரும் செப்டம்பர் 17 ஆம் திகதி வட்டி விகித முடிவை எடுக்கும் கனடா மத்திய வங்கி, இந்த புள்ளிவிவரங்களை கவனமாக ஆய்வு செய்யவுள்ளது.







# கனடாவிலிருந்து வெளியேறும் மக்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

கனடாவிலிருந்து வெளியேறும் மக்கள் எண்ணிக்கை வரலாறு காணாத அளவில் அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விடயத்தை சமீபத்திய கனேடிய புலம்பெயர்தல் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

விலைவாசி உயர்வு, வீடுகள் தட்டுப்பாடு அல்லது ஒரு நல்ல வேலையைத் தேடிக்கொள்ளும் நோக்கம் என பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்பட்டாலும், மொத்தத்தில் கனடாவிலிருந்து வெளியேறும் மக்கள் எண்ணிக்கை வரலாறு காணாத அளவில் அதிகரித்துள்ளது.

2024ஆம் ஆண்டில், 106,134 பேர் கனடாவை விட்டு வெளியேறியுள்ளதாக கனடா புள்ளியியல் துறை தரவுகள் தெரிவிக்கின்றன.

1967ஆம் ஆண்டுக்குப் பிறகு இவ்வளவுபேர் கனடாவை விட்டு வெளியேறியுள்ளது 2024 இல்தான்.

2025 ஆம் ஆண்டில் முதல் காலாண்டிலேயே, கனேடிய வரலாற்றிலேயே முதல் முறையாக 27,086 பேர் கனடாவிலிருந்து வெளியேறியுள்ளார்கள். அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர்தான் மீண்டும் கனடாவுக்குத் திரும்பியுள்ளார்கள்.

குறிப்பாக, கனடாவின் ஒன்றாறியோ மாகாணத்திலிருந்துதான் அதிக அளவில் மக்கள் வெளியேறிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டில், ஒன்றாறியோவிலிருந்து 50,680 பேர் வெளியேறியுள்ளார்கள். இந்த எண்ணிக்கை, ஒன்றாறியோவுக்கு அடுத்த இடத்திலிருக்கும் பிரிட்டிஷ் கொலம்பியாவை ஒப்பிடும்போது 2.5 மடங்கு அதிகமாகும்.

கடந்த ஆண்டு கனடாவிலிருந்து வெளியேறியவர்களில் கிட்டத்தட்ட பாதியளவு மக்கள் (48 சதவிகிதம் பேர்), ஒன்றாறியோவிலிருந்து வெளியேறியுள்ளார்கள்.

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களிலேயே கனடாவிலிருந்து வெளியேறியவர்களில் 50 சதவிகிதத்துக்கும் அதிகம்பேர் ஒன்றாறியோவிலிருந்துதான் வெளியேறியுள்ளார்கள்.





# கனடாவில் இலங்கை தம்பதியினரின் மகன் சுட்டுக் கொலை; இருவர் கைது

கனடாவில் இலங்கைத் தமிழ் தம்பதியரின் மகன் சுட்டுக் கொல்லப்பட்ட விடயம் தொடர்பில் 17 வயது இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடாவின் ஒன்ராறியோவிலுள்ள Scarboroughவில் வாழ்ந்துவரும் அமலதாஸ் மரியதாசன், ஜூடின் பாசில் தம்பதியரின் மகன் டானியல் அமலதாஸ்.

அமலதாஸ் மரியதாசன், ஜூடின் பாசில் தம்பதியர், 1993ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து கனடாவுக்கு புலம்பெயர்ந்தவர்கள் ஆவர். தம்பதியருக்கு கனடாவில் பிறந்த மகன் டானியல் அமலதாஸ் (வயது 19).

கடந்த வியாழக் கிழமை, Scarborough டவுன் சென்றறிலுள்ள வர்த்தக தொகுதியில் எதிரே பொருள்கள் வாங்கிக் கொண்டிருந்திருக்கிறார்கள் அமலதாஸ் ஜூடின் தம்பதியர்.

அப்போது, திடீரென பொலிஸாரும் மருத்துவ உதவிக்குழுவினரும் வர்த்தக தொகுதிக்கு விரைய, யாருக்கோ ஏதோ பிரச்சினை என்பதை அறிந்துள்ளார்கள் அமலதாஸ் ஜூடின் தம்பதியர்.

ஆனால், அவர்களுக்குத் தெரியாது, அங்கு ஒரு இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டதும், அது தங்கள் மகன் டானியல்தான் என்பதும்.

பின்னர் அவர்கள் வீடு திரும்பிய நிலையில், மகனைக் காணாமல் அவனை மொபைலில் அழைக்க, மகனை தொடர்புகொள்ள முடியவில்லை.

டானியல் வீடு திரும்பவேயில்லை. மாறாக, வீட்டுக்கு பொலிஸார்தான் வந்துள்ளார்கள். பொலிஸார் துப்பாக்கிச் சூடு குறித்து கூறியபோதுதான் ஷாப்பிங் மாலில் தங்கள் மகன் கொல்லப்பட்டது குறித்து அவர்களுக்குத் தெரியவந்துள்ளது.

டானியலை கொலை செய்த குற்றச்சாட்டில், 17 வயது இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

தங்கள் மகனுக்கு எதனால் இப்படி நடந்தது என்று தங்களுக்குத் தெரியவில்லை என்று கூறும் அமலதாஸ் ஜூடின் தம்பதியர் கண்ணீர் விட்டுக் கதறிக்கொண்டிருக்கிறார்கள்.

கனடா பாதுகாப்பான நாடு, எங்கள் பிள்ளைகள் இங்கு பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்று நினைத்தோம் என்கிறார் ஜூடின்.







## கொலம்பியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்தேகத்துக்கிடமான காட்டுத்தீ தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என கனடிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரிட்ஜ்டேல் மற்றும் பென்டிக்டன் அவென்யூ அருகே ஏற்பட்ட தீ சம்பவத்துக்குப் பிறகு குறுகிய நேரத்தில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

தீ ஏற்பட்டவுடன் ஹெலிகாப்டர்கள் உதவியுடனும் உள்ளூர் தீயணைப்பு வீரர்களின் உதவியுடனும் வேகமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

காட்டுத்தீ வீடுகளையும் வாழ்வாதாரங்களையும் அழித்து சமூகங்களை குழப்பத்தில் ஆழ்த்தக்கூடும் மாகாண அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒவ்வொருவரும் தனிப்பட்ட பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

மாநிலம் முழுவதும் தற்போது 80க்கும் மேற்பட்ட தீக்கள் எரிந்து வருகின்றன.

அதில் 19 கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகக் கருதப்படுகின்றன. பெரும்பாலான புதிய தீக்காட்சிகள் மின்னல் தாக்கத்தால் ஏற்பட்டவை என காட்டுத்தீ சேவை அறிவித்துள்ளது.

இந்த ஆண்டில் இதுவரை 981 காட்டுத்தீக்கள் 7.3 லட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பை எரித்துள்ளன. மக்கள் அவசர பைகள் தயார் நிலையில் வைத்திருக்கும்படிஅதிகாரிகள்அறிவுறுத்தியுள்ளனர்.



